©
தமிழ்நாடு அரசு
2018

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 51] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 19, 2018
மார்கழி 4, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049

# பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 158, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H2)த் துறை, 8 நவம்பர் 2018.]*

1961 ஆம் ஆண்டு பேறுக்காலச் சலுகைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1961) 28–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1967–ஆம் ஆண்டு பேறுக்காலச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 28–ஆம் பிரிவின் (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, எற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 16–ஆம் விதியில் துணை விதி (1)–இன் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"மேலும், பின்வருமாறு இருப்பின், வேலை அளிப்பவர் படிவம் K – இல் ஆண்டு கணக்கு விவர அறிக்கையை அனுப்பத் தேவையில்லை. அவையாவன:–

(a) தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் விதிகளின் 42–ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் XIII–இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(b) தமிழ்நாடு 1968–ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிலைமைகள்) விதிகளின் 35–ஆம் விதியின் (ii) துணை விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIII–இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(c) தமிழ்நாடு 1955–ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் விதிகளின் 83–ஆம் விதியின் துணை விதி (1)–இல் கோரியுள்ளவாறாக, படிவம் எண். 28–இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது; அல்லது

(d) தமிழ்நாடு 1965–ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் விதிகளின் 43–ஆம் விதியில் கோரியுள்ளவாறாக, படிவம் எண் XIX–இல் ஒருங்கிணைந்த ஆண்டு கணக்கு விவர அறிக்கை ஒன்று அளிக்கப்படுகிறது."

**சுனில் பாலிவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.